# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.117/2017** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா–02 (PW–02)** |
| **பெயர்** | :– | **ஹாரிஷ்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜூலைதிங்கள் 02 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் கோவை மாவட்டம் மேட்டுபாளையத்தில் வசிக்கிறேன். நான் தற்போது உணவகம் வைத்துள்ளேன். இதற்கு முன்பும் உணவகம்தான் வைத்திருந்தேன். சான்றாளர் சபீக் அகமது மேட்டுப்பாளையம் ஊரை சேர்ந்தவர். அவர் பழைய வாகனங்களின் உதிரி பாகம் விற்கும் தொழில் செய்துவந்தார். என்னுடைய பழைய கைபேசி எண்.9043233550 ஆகும்.

சுமார் 9 ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் சபீக் அகமது என்னிடம் வந்து சேலத்தில் பழைய மகிழுந்து ஒன்று உள்ளது என்றும் அதை பார்த்துவிட்டு வரலாம் என்றும் சொன்னார். நாங்கள் புறப்பட்டு மாலை 4.00 மணிக்குமேல் சேலத்திற்கு வந்தோம். பேருந்து நிலையத்திற்கு அருகில் இருந்த ஒரு பட்டரைக்கு சென்றோம். அந்த பட்டரையின் பெயர் தெரியவில்லை. சேலத்தில் இருந்து வந்தவர் எங்களை இருசக்கர வாகனத்தில் அழைத்துசென்றார். அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. அங்கு இருந்த மகிழுந்து ஓட்டிசெல்லும் நிலையில் இல்லை. இழுத்துபோகும் நிலையில்தான் இருந்தது. எனக்கு என் கடையில் வேலை இருந்தது. எனக்கு உடல்நல குறைவு ஏற்பட்டது. நான் புறப்படுகிறேன் என்று சொன்னேன். அவர் நீ போ நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். நான் பேருந்து ஏறி மேட்டுப்பாளையம் சென்றேன். மேட்டுப்பாளையத்திலிருந்து சேலத்திற்கு பேருந்தில் வந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

நாங்கள் இருவரும் சேலத்திற்கு வந்ததும் சரவணபவன் உணவகத்தில் சாப்பிட்டோம் என்றால் சரிதான். சபீக் அகமதுவின் நண்பர் மணி என்கிற இளமுருகன் உணவகத்திற்கு வந்தாரா என்றால் ஒருவர் வந்தார். அவர் யார் என்று

எனக்கு தெரியவில்லை. அவ்வாறு வந்தவருடன் இருவர் வந்தனர். அவர்களுடன் இருச்சக்கர வாகனத்தில்தான் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் சென்ற பட்டரையின் பெயர் ஜென் என்றால் சரிதான். அழைத்துச் சென்றவர் மகிழுந்தை காட்டினார் என்றால் சரிதான். அது என்ன மகிழுந்து என்று எனக்கு நினைவில்லை.

மற்ற இருவர் வெளியில் இருந்தனர் என்றால் ஒன்றாகத்தான் இருந்தனர். என்னை அழைத்துச் சென்றவருக்கு அழைப்பு வந்து அவர் இருச்சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு வெளியே சென்றார் என்றால் அதற்கு முன்பாகவே நான் சென்றுவிட்டேன். மணி அவ்வாறு சென்றார் என்றும் அவர் சென்றதும் நாங்கள் வெளியே வந்து பார்த்தோம் என்றும் அப்போது பார்த்தால் அடையாளம் சொல்லக்கூடிய சுமார் 6 ஆட்கள் முதன்மை சாலையில் மணி சென்ற இருச்சக்கர வாகனத்தை மறித்து மணியை கையில் வெட்டினார்கள் என்றும் மணி அலறிக்கொண்டு கீழே விழுந்தார் என்றும் அந்த நபர்கள் மணியை வெட்ட வந்ததும் மணி எழுந்து நீங்கள் நின்ற பட்டரையை நோக்கி வேகமாக ஓடிவந்தார் என்றும் அந்த கூட்டத்தில் இருந்த ஒருவர் பிரகாஷ் அவனை விடாமல் வெட்டி சாயுங்கள் என்று கத்தினார் என்றும் நீங்கள் நின்ற இடத்தில் மணியை மறித்து அவர்கள் மாறிமாறி வெட்டினார்கள் என்றும் மணி அந்த இடத்திலேயே இறந்துபோய்விட்டார் என்றும் நீங்கள் பேருந்து ஏற சென்றதாகவும் சாகிப் அகமது காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றதாகவும் புலனாய்வின்போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.